# நலமான கல்வி! வளமான பாரதம்!




கடமையாற்ற அழைப்பது

# நின் சமுதாயம்



முதலில் உங்களை அவர்கள் உதாசினப்படுத்துவர்,
பிறகு உங்களைக் கண்டு அவர்கள் எள்ளி நகையாடுவர்,
பிறகு உங்களுக்கு எதிராக சண்டையிடுவர்,
பிறகு நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

**- மகாத்மா காந்தி**

தொன்மையானவர்களே!

உலகில் அதிக இளைஞர்களைக் கொண்ட நாடு இந்தியா ஆனால் படித்த இளைஞர்கள் வேலை பெறத்தகுதியற்றவர்களாய் இருப்பதும் இங்கே தான். NASSCOM என்ற மென் பொருட்கள் சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பின் அறிக்கைப் படி படித்த பட்டதாரிகளில் 75% பேர் வேலை பெறத்தகுதியற்றவர்கள் . இதுதான் நம் நாட்டின் இன்றையக் கல்வியின் தரம். கல்வி என்பது, “மனிதனின் மனிதத்தன்மையை அவனுக்கு உணர்த்தும் அடிப்படையைக் கொண்டது”. சமுதாய அவலங்களுக்கும் அதன் காரணிகளுக்கும் தீர்வாகச் சமூகவியலாளர்கள் முன்னிறுத்துவது கல்வியைத்தான். ஆனால் நம் நாட்டில் கல்வியே பல சமுதாயப் பிரச்சனைகளுக்குக் காரணமாக இருக்கிறது.

“உண்மையான கல்வி என்பது தகவல்களைச் சேகரிப்பதல்ல; அது மனிதனின் இயல்பான ஆற்றலை வளரச் செய்வது” என்ற விவேகானந்தரின் கருத்து இன்றையக் கல்விச் சூழலில் எதிர்மறையாகப் பயன்படுகிறது. இன்றைய மாணவர்கள் “புத்தகத்தில் உள்ள எழுத்துகளை மனனம் செய்யும் இயந்திரங்களாக உருவாக்கப்படுகிறார்கள்”.

அறம், பொருள் என்ற எந்தச் சிந்தனையும் கல்வி மூலம் பரப்பப்படுவது இல்லை. அது மனிதர்களைச் சமுதாயத்தில் வருவாய் ஈட்டத் தகுதிப்படுத்தும் களமாக மாற்றப்பட்டு விட்டது. “கற்கும் சூழலிருந்து கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் வரை” அனைத்தும் கல்விக்கான அடிப்படைக் காரணத்தில் இருந்து விலகிப் பயணப்படுகிறது.

நம் நாட்டில் கல்வி நிலையங்கள் அரசாங்கம் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை அரசாங்கம் பல திட்டங்களை செயல்படுத்தினாலும் அது கல்வித் தரத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. உயர் கல்வித்துறையில் அரசாங்கத்தினால் முழுத் தேவையையும் பூர்த்திசெய்ய முடியவில்லை. இதை நன்றாகப் பயன் படுத்திக்கொண்ட தனியார் கல்வி நிறுனவங்கள் கொள்ளை லாபம் அடிக்கின்றன. கல்வி என்ற சொல்லையே முழுமையான வணிகப் பொருளாக்கிப் பல்கிப் பெருகுகின்றன.

இன்றையச் சூழ்நிலையில் அரசாங்கப் பள்ளிகள் ஏழைகளின் குறியீடாக மாற்றப்பட்டு, தரமற்ற கல்வியின் அடையாளமாக சித்தரிக்கப்படுகிறது. இதற்கு அரசாங்கமும் அதன் பலவீனமுமே காரணம். அதனால் தனியார் நிறுவனங்கள் தங்கள் கல்வி நிலையங்களைப் பல சரக்குக்கடைகளாக்கி பெற்றோரை அதன் நுகர்வோராக்கியிருக்கிறது. உயர் கல்வித்

துறையில் தனியாரின் இமாலய வளர்ச்சி ஏழைகளுக்குக் கல்வியை எட்டாக் கனியாக்கி, கல்வியைத் தரம் தாழ்ந்து போகச் செய்துள்ளது.

ஒரு நொடியில் தம்மை ஆயிரம் பேராக மாற்றிக்கொள்ள எவரால் முடியுமோ அவர்தான் உண்மையான ஆசிரியர். யாரால் மாணவனின் நிலைக்கு உடனே இறங்கிவர முடியுமோ, தன் மனதை மாணவர்களின் மனதிற்கு மாற்ற முடியுமோ, யாரால் மாணவனின் கண்களால் பார்க்கவும், அவனது காதுகளால் கேட்கவும் அவனது மனதின் மூலம் புரிந்து கொள்ளவும் முடியுமோ அவர்தான் உண்மையான ஆசிரியர். மேற்சொன்ன வார்த்தைகள் இன்றைய ஆசிரியர்கள் பலரையும் காயப்படுத்தும்.ஏனெனில், அவர்கள் “கற்பித்தலை ஒரு தொழிலாகக் கருதி வந்தவர்கள்”.

சர்வதேச மாணவர்கள் மதிப்பீட்டு நிகழ்வில் (PISA) கலந்து கொண்ட 74 நாடுகளில் இந்தியா பெற்றிருப்பது 71வது இடம். இந்த முடிவு நமது ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை எள்ளி நகையாடுவதாக உள்ளது. பள்ளிகளின் நிலை இப்படியென்றால் உயர் கல்வி ஆசிரியர்களின் நிலை மேலும் பரிதாபம். இன்றைய நிலையில் வேறு வேலை கிடைக்காதவர்கள் மட்டுமே ஆசிரியர்களாகத் தனியார் கல்லூரிகளில் சேரும் அவலம் நடந்து கொண்டிருகிறது. தன்னையே ஒழுங்காகத் தயார்படுத்திக் கொள்ளாதவர்கள் அடுத்த தலைமுறையின் எதிர்காலத்தை வளப்படுத்துவார்களா? இன்றையக் குழந்தைகள் இப்படிப்பட்ட தகுதியற்ற ஆசிரியர்களால் வாழ்வை இழக்கின்றனர்.

கல்வியின் அடிப்படைகளாக UNESCO கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகிறது.

1. புரிந்து கற்றல்.
2. கற்றதை செயல்படுத்துதல்.
3. அனைவருடனும் இணைந்து வாழக் கற்றல்.
4. கற்ற அறிவின்படி வாழ்தல்.

நமது பல்கலைக்கழகங்களும், அரசாங்க அமைப்புகளும் மேற்சொன்ன முறையில் பாடத்திட்டங்களை அமைக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை. அவை குமாஸ்தாக்களை கொண்டாடும் ஒருமைப் பாடத்திட்டங்களாகவே அமைக்கப்படுகிறது. தனியார் நிறுவனங்களும் மேற்சொன்னவற்றை வரிவிடாமல் கடைப்பிடிக்கின்றன.

கல்வியென்பது, “கருவில் வளரும் குழந்தைக்குத் தொப்புள் கொடி வழியாகத் தாய் அளிக்கும் உணவிற்கு ஒப்பானது”. தாய் அளிக்கும் உணவு நஞ்சானால் கரு கழிவாகும். அதேபோல் வளரும் தலைமுறைக்கு அளிக்கும் தவறான தகுதியற்ற கல்வி அவர்களை நாசப்படுத்தும். மேலும் சமுதாயம் கெட்டுச் சீரழியும்.

படையெடுப்புகளில் ஒரு நாட்டைக் கைப்பற்றியவுடன் ஏகாதிபத்திய நாடுகள் செய்யும் செயல்களில் முக்கியமானது அந்தநாட்டின் கல்வி முறையை உடைப்பது. கல்விமுறை என்பது, ஒரு நாட்டிற்கு முதுகெலும்பு போன்றது. அது சரியாகப் பாதுகாக்கப்படாமல் போனால் நாட்டின் அடிப்படைக்கே ஆபத்து. நமது மோசமான கல்விமுறையின் விளைவு குட்டிக் குட்டி நாடுகளுடன் கூடத் தொழில்நுட்பத்தில் போட்டி போட முடியாமல் பின் தங்கியுள்ளோம்.

14 வயது வரை கட்டாயக் கல்வி என்ற திட்டத்திற்கே சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் நாம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது . ஒவ்வொரு குடிமகனுக்கும் தரமான கல்வி என்ற இலக்கை அடைய எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். அதுவரை நாம் பொறுத்திருந்தால் நம் சமுதாயம் தாங்காது . ஒருவனுக்குத் தேவையான கல்வி மறுக்கப்பட்டால் என்னவாகும்? என்பதற்குப் பல எதிர்மறையான சான்றுகள் உள்ளன.

கல்வி முறையில் மாற்றங்களைக் கொண்டுவர இந்திய அரசாங்கம் பல கமிஷன்களை அமைத்து அறிக்கைகளைத் தாக்கல் செய்ய வைத்தது. அவை ஏட்டுச் சுரைக்காய்; இன்று வரை அவற்றைக் கொண்டு அரசு கறி சமைக்கவில்லை. அவற்றுள் 2007 ஆம் ஆண்டு திரு.எஷ்பால் அவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழு தாக்கல் செய்த "இந்தியக் கல்விமுறையைப் புதுப்பித்தல் மற்றும் இளமையாக்குதல்" என்ற ஆய்வறிக்கை பல புரட்சிகரமான மாறுதல்களை வலியுறுத்துகிறது. அதை அரசாங்கம் நிறைவேற்றுவதாகச் சொன்னாலும் இன்னும் ஆக்கபூர்வமான பணிகளில் இறங்கவில்லை.

கிடைப்பதற்கு அரிய வளம் மனித வளம் அதைத் தேர்ந்த கல்விகொண்டு செப்பனிடுவதே நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் . மாறாக மனித வளத்தை வீணடித்தால் பல வீழ்ச்சிகளுக்கு வித்திடும் பிரச்சனைகள் தோன்றும்.

எந்தச் சமுதாய மாற்றத்திற்கும் பயனளிக்காமல் குற்றங்கள் மட்டும் சொல்வது நகைப்பிற்குரியது. எரியும் வீட்டையும், அழும் குழந்தையையும் பார்த்து அமைதியாயிருப்பது பொறுமை அல்ல; சவமாய் இருப்பது என்று பொருள். நம் கல்வி முறையின் தவறுகளுக்கும்,மோசமான விளைவுகளுக்கும் நாம் ஒவ்வொருவரும் வாழும் உதாரணம்.அதை மாற்ற முயற்சி எடுக்க வேண்டும் என்பது அனைவரின் கடமை.

நாம் நம் தேவையை உணர்ந்து விட்டோம் எனில், தரமான கல்வி, முறையான கல்வி, உயிருள்ள கல்வி மற்றும் அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படையை அரசாங்கத்திடம் ஒலிக்க வேண்டும். நம் குரல் தேவையானவற்றை ஒலிக்கவில்லை என்றால் வருங்காலம் ஒளியிழந்துவிடும்.

தரமான கல்வியை வலியுறுத்தி நம் கோரிக்கைகளை அரசாங்கத்திடம் திடமாக எடுத்துரைப்போம்.

1. நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 10% கல்விக்காகச் செலவிடப்பட வேண்டும். இதனால் அரசாங்கக் கல்வி நிறுவனங்கள் பெருகுவதுடன் தரமான கல்வி அனைவருக்கும் கிடைக்கும்.
2. படிக்க விரும்பும் அத்துணை மாணவர்களுக்கும் கல்வி கிடைக்க அரசு வழி வகை செய்யவேண்டும்.பொருளாதாரம் கல்விக்குத் தடையாக அமைவதை முற்றிலும் தடுக்க வேண்டும்
3. கல்விக்கூடங்களை நடத்தும் தொண்டு நிறுவனங்கள் நன்கொடை மற்றும் கட்டணக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வேண்டும்.
4. கல்விக் கட்டணங்கள் நாடு முழுவதும் சீராக அமைய வேண்டும்.
5. கல்விக்கடன் என்பது வட்டியில்லாக் கடனாக மாற்றப்பட வேண்டும்.
6. தனியார் நிறுவனங்கள் நடத்தும் அனைத்துப் பள்ளிகள் , கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் முதலியவற்றிற்கான கட்டணங்களை அரசாங்கத்தின் மூலமாகவே செலுத்த வேண்டும்.
7. தனியார் கல்வி நிறுவனங்களில் உள்ள நிர்வாக ஒதுக்கீட்டை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும்; அல்லது கணிசமாகக் குறைக்க வேண்டும்.

8. கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் தேர்வு பொதுவான நுழைவுத் தேர்வின் மூலமே நடத்தப்பட வேண்டும். இதில் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு எந்தச் சலுகைகளும் வழங்கக் கூடாது.
9. நாடு முழுவதும் சமச்சீர்க் கல்வியை அமல்படுத்த வேண்டும். மாநில மற்றும் மத்தியப் பாடத்திட்டங்களை ஒருங்கிணைத்துச் சீரான பாடத்திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.
10. அரசாங்கப் பள்ளிகளால் தான் கணிசமான கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திறமையான ஆசிரியர்களைப் பெருக்க வேண்டும்
11. பள்ளி அளவில் குழந்தைகளின் தனித்திறமைகளைக் கண்டுபிடிக்கும் முறைகளை அமல்படுத்தி அவர்களை தக்க துறையில் பயிற்சி பெற வழிவகை செய்ய வேண்டும்.
12. ஆசிரியர் பயிற்சிக் கல்வி நாட்டின் உயர் கல்வித் துறையின் மூலம் வழங்கப்பட வேண்டும்.அதனால் சிறந்த தேர்ந்த ஆசிரியர்களை உருவாக்க முடியும்.
13. தனியார் பள்ளி முதல் கல்லூரி வரை ஆசிரியர்களின் குறைந்த பட்சச் சம்பளம் அவர்களைச் சென்றடைகிறதா என்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.
14. அடிப்படைக் கல்விச்சூழல் மற்றும் கட்டமைப்பு இல்லாத கல்வி நிறுவனங்களைத் தடை செய்ய வேண்டும்.
15. புத்தக அறிவை விடக் கற்றவற்றைப் புரிந்து பொருத்திப் பார்க்கும் அறிவை வளர்க்கும் பாடத்திட்டத்தை அமைக்க வேண்டும்.
16. பள்ளித் தேர்வுகள் கற்றல் + விழிப்புணர்வு + செயல்படுத்தும் திறன் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
17. கல்வி உதவித் தொகை மற்றும் கல்விச் சலுகை தகுந்த மாணவர்களை சென்றடைகிறதா என்று உறுதி செய்ய வேண்டும்.
18. மதிப்பெண்ணை மட்டும் மையப்படுத்தும் தேர்வு முறை மற்றும் பாடத்திட்டத்தை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும். உயர் நிலை பள்ளிகள் என்ற போர்வையில் பல தனியார் பள்ளிகள் மாணவர்களை மதிப்பெண்களை மையப்படுத்தி மூர்க்கத்தனமாகத் தயார்ப் படுத்தும் நிலையை மாற்ற வேண்டும்.
19. பள்ளிகள் எட்டு மணி நேரத்திற்கு மேல் செயல் படத் தேவையில்லை.விளையாட்டு, கலை, இலக்கியம் மற்றும் சமூகம் சார்ந்த ஈடுபாடும் மாணவர்களுக்கு அவசியம் என்பதைப் பதியும் படி செய்ய வேண்டும்.

20. அரசுப் பள்ளிகள்,கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஆசிரியர்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் திறன் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு தக்க பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
21. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்களின் செயல் திறன் மற்றும் கல்வியின் தரம் குறித்துக் கருத்துகள் கேட்கப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
22. உண்மையான நோக்கத்திற்காகச் செயல்படும் தொண்டு நிறுவனங்களை அரசாங்கத்துடன் இணைந்து கல்விப்பணி செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும்.
23. பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிக் கூடங்களாகவும் அதற்கான உட்கட்டமைப்புக் கொண்டனவாகவும் இருக்க வேண்டும். பல்கலைக்கழகங்கள் தங்கள் அண்மைச் சமுதாயத் தன்மைகளை ஆய்வு செய்யும் அறிவுக் களங்களாக மாற்றப்பட வேண்டும் மற்றும் தொழில் முறை ஆராய்ச்சி நிறுவனங்களுடன் பரஸ்பரத்தொடர்புகள் மற்றும் பரிமாற்றங்கள் செய்ய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.
24. அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் தொழில் முறை நேரடிப் பயிற்சி கட்டாயமாக்கப்பட வேண்டும். இதன் மூலம் கற்ற கல்வியின் உண்மையான பயன்பாடு அனைத்து மாணவர்களுக்கும் விளங்கும்.
25. ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் கீழும் செயல்படும் உறுப்புக் கல்லூரிகளின் அளவு வரையறைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
26. சிறு பல்கலைக்கழகங்கள் பட்டங்களை வழங்கும் முறையை மாற்றி அவற்றைக் கல்லூரிகளாக மாற்ற வேண்டும்.பல்கலைக்கழகங்கள் என்பன விரிவான அறிவின் வெளிகளாகவும், மிகச் சிறந்த ஆராய்ச்சிக் களங்களாகவும், பல் துறை அறிவுப் பெட்டகங்கள் ஆகவும் திகழ வேண்டும்.
27. அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இளநிலைப் படிப்புகளை வழங்கவேண்டும். பல்கலைக்கழகத்தின் தேர்ந்த ஆசிரியர்கள் அனைவரும் இளநிலைப் படிப்புகளைக் கற்பிப்பதன் மூலம் மாணவர்கள் அடிப்படைகளை நன்கு உணர்வர்.
28. துறை சார்ந்த பல்கலைக்கழகங்கள் ஒழிக்கப்பட வேண்டும். இதனால் மாணவர்கள் பல் துறை அனுபவங்கள் மறுக்கப்பட்டு தாங்கள் படிக்கும் துறையை மட்டும் காட்டி இருட்டடைப்புச் செய்யப்படுகிறார்கள்.

29. தொழில்முறைக் கல்விப் பிரிவுகளும் அறிவியல், கலை மற்றும் சமூகவியல் போன்ற அடிப்படைத் துறைகளுக்கும் இணைப்பை ஏற்படுத்த வேண்டும். அனைத்துத் தொழில்களும் மேற்சொன்ன அடிப்படைப் பிரிவுகளின் தாக்கங்களை உடையது.அதன் மூலம் மிகச்சிறந்த மருத்துவர்களையும் பொறியாளர்களையும் உருவாக்கலாம்.
30. அனைத்துத் துறை இளநிலைப் பட்டப் படிப்புகளில் கலை மற்றும் சமூகவியல் பாடங்களைக் கட்டாயமாக்க வேண்டும் . அவற்றின் மூலம் மாணவர்கள் தத்தமது துறைகளைப் புதிய கண்ணோட்டத்துடன் காண்பர்.
31. அனைத்துத் தொழிற்கல்வி நிறுவனங்களும் பல் துறைகளையும் தம்மகத்தே கொண்ட ஒரு பல்கலைக்கழகத்தின் அங்கமாக மட்டுமே இருக்க வேண்டும்.இதன் மூலம் மாணவர்கள் பல் துறை அறிவுகளைப் பெற்று அதைத் தங்கள் துறைகளில் பயன்படுத்துவர். இத்தகைய சூழல் போற்றதக்க கண்டுபிடிப்புகளையும், ஆராய்ச்சிகளையும் நமக்குத் தரும்.
32. நாட்டில் உள்ள சிறந்த தொழிற்சாலைகள் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து மாணவர்களுக்கு நேரடிப் பயிற்சி வழங்கத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அதற்கேற்பத் தொழிற்சாலை விதிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய திட்டங்களுக்குத் தாமாக முன்வரும் தொழிற்சாலைகளுக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்க வேண்டும்.
33. தொழிற் துறை நிறுவனங்களின் நிபுணர்கள் மற்றும் குறிப்பிட்ட துறை சார்ந்த வல்லுநர்கள் கல்விக்கூடங்களில் பயிற்சிகள் அளிக்கும் வகையில் பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.
34. அதீதத் திறமைகளை வெளிப்படுத்தும் சாதனையாளர்களுக்கு நடைமுறைக் கல்வி முறைகளில் இருந்து விலக்களித்துச் சிறப்புப் பட்டங்கள் வழங்க பல்கலைக் கழகங்கள் முன்வர வேண்டும்.

மேலும் உங்கள் ஆதரவை தெரிவிக்க உங்கள் கையெழுத்தை பதிவுசெய்யுங்கள்.

***இணைந்திடுங்கள்:***

**https://www.facebook.com/rebi13**

**http://rebi.ninsociety.com**

**ninhelp@gmail.com**